# நாளை தமிழ் ஈழம் வருகிறது அமரர் 'திரு'வின் புனித அஸ்தி!


# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2007 | கார்த்திகை16 | துல்ஹஜ் 9 (1-12-76) புதன் | புத்தகம்30 | இதழ் 64


## இறுதி அஞ்சலிக்கு கூட்டணி ஏற்பாடு!

தமிழ் தேசிய இனத்துக்காக தம்மையே அர்ப்பணித்த அமரர் திருச் செல்வத்தின் புனித அஸ்தி நாளை வியாழக்கிழமை முதன்முதலாக தமிழ் ஈழ நாட்டுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. தமிழ் ஈழத்தின் பிரதான நகர்களிலொன்றான யாழ்ப்பாணத்துக்கு அஸ்தியின் ஒரு பகுதி நாளை எடுத்துச் செல்லப்படும், அதே வேளையில் தமிழ் ஈழத்தின் ஏனைய நகர்களுக்கும் அமரரின் அஸ்தி பின்னர் எடுத்துச் செல்லப்படும்.

அமரரின் புனித அஸ்திக்கு பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தமிழர் விடுதலைக் கூட்டணி கவனித்துவருகிறது. பொதுமக்கள் அஞ்சலிக்குவைக்கப்பட்ட பின்னர், அமரரின் அஸ்தி கீரிமலைகடலில் கரைக்கப்படும்.

நாளை (2-12-76) வியாழக்கிழமை காலை கொழும்பிலிருந்து தமிழ் ஈழம் நோக்கி புறப்படும் யாழ்தேவியில் அமரரின் புனித அஸ்தியடங்கிய கலசத்தை அமரரின் மகனும், அரசாங்க எழுதுவினைஞர் சங்க பொதுச் செயலாளர் திரு.

—4-ம் பக்கம் பார்க்க

# "வடக்கு, கிழக்கு மலையக உறவை என்றும் கட்டிக் காப்போம்!"

### யாழகத்தில் தொண்டமான் உரை!

"வடக்கும், கிழக்கும், மலையகமும் கைகோத்து முன்னேற வேண்டும்; தமிழர்கள் சுதந்திரமாக, உரிமை பெற்று வாழவேண்டும்; இவையே அமரர் திருச் செல்வத்தின் இலட்சியங்களாக விளங்கின, இந்த இலட்சியங்களுக்காக நாம் இறுதி வரை உழைப்போம்!"

இவ்வாறு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடத்தின் சார்பில் நடைபெற்ற அமரர் திருச் செல்வம் இரங்கற் கூட்டத்தில் பேசிய கூட்டணித் தலைவர்களில் ஒருவரும் இ.தொ.கா. தலைவருமான திரு. எஸ். தொண்டமான் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் 27-11-76 சனிக்கிழமை மாலை நடைபெற்றது. கூட்டத்துக்கு திரு. எஸ். தொண்டமான் தலைமை தாங்கினார். அவர் மேலும் கூறியதாவது:—

"ஈழத்தில் தமிழ் மக்கள் ஒன்றுபடவேண்டும் என்று விரும்பி, அதற்காக பாடுபட்டவர் அமரர் திருச்செல்வம் அவர்கள். இன்று தமிழ் மக்கள்' ஒரே அமைப்பின் கீழ் ஒன்றுபட்டிருக்கிறார்கள். இந்த ஒற்றுமையை நாம் எப்படியும் கட்டிக் காக்கவேண்டும்.

"மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும், வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் சில வேறுபாடுகள் இருந்தபோதிலும்—உரிமை பெற்ற இனமாக தமிழினம் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதே நம் அனைவரதும் குறிக்கோளாகும்.

"மலையகத் தமிழர்கள் தாங்கள் தலைமுறை தலைமுறையாக பிறந்து வளர்ந்து வளம்படுத்திய மலையக பூமியில் தாங்கள் சம உரிமையுடன்; மொழி கலாசார உரிமையுடன், வாழ்வதற்குப் போராடுகிறார்கள்; குடியுரிமை பெற்ற மலையகத் தமிழர்கள[illegible] கொண்ட தமிழ்க் கிராமங்களை மலையகத்தில் ஏற்படுத்த நாம் முனைந்து நிற்கிறோம். மலையகத்தில் ஒருசில தொகுதிகளை நாம் தமிழர்கள் கைப்பற்றவும் வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய மொழியையும், கலாசாரத்தையும், தனித்துவத்தையும் கைவிடாமல், அதே நேரத்தில் சிங்களவர்களுடன் சம உரிமை பெற மலையகத்தில் நாம் போராடுகிறோம். வ[illegible]க்கு, கிழக்கு, மாகாணத் த[illegible] மக்களாகிய நீங்கள் உ[illegible]கள் இழந்த தனியரசை மீளமைத்து தனிநாடமைக்கப் போராடுகிறீர்கள். எனவே எங்கள் அனைவரின் அடிப்படை நோக்கமும் ஒன்றுதான்.. தமிழினமும் சுதந்திரமும், உரிமையும் பெற்று தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதுதான். எனவேதான் நாம் ஒன்றாக

—4-ம் பக்கம் பார்க்க



இறுதிவரை இனத்துக்காக உழைத்த ஈழத்தமிழகத்தின் இணையற்ற தலைவர் அமரர் திருச்செல்வத்தின் இறுதி யாத்திரையின்போது அஞ்சலி செலுத்த திரண்டுவந்த மக்கள் வெள்ளத்தின் ஒரு பகுதி.

## எழுத்தாணை மனுமீது டிசெம்பர் 7ல் விசாரணை!

யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாகொலை வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்டுள்ள ட்ரயல்—அற்—பார் நீதிமன்றத்துக்கு மேற்படி வழக்கை விசாரிக்க உரிமையோ அதிகாரமோ இல்லையென்று தெரிவித்து மேற்படி கொலை வழக்கின் சந்தேக நபர்களான ஏழு இளைஞர்கள் சார்பிலும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்தாணை (ரிட்) மீதான விசாரணை டிசெம்பர் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவிருக்கிறது.

இவ்விசாரணையின் போது ட்ரயல்—அற்—பார் மேல் [illegible]ன்ற நீதிபதிகள் மூவரும் சட்டமா அதிபரும் உயர் நீதிமன்றத்துக்கு ஆஜராகியிருக்க வேண்டுமென்று நீதியரசர்கள் கட்டளைபிறப்பித்துள்ளனர்.

நீதியரசர் ஜே. ஜி. டி. வீரரத்தின (தலைவர்) நீதியரசர் ஏ. வைத்திலிங்கம், நீதியரசர் பேர்ஸிகொலின் தோமே ஆகியோர் முன்னிலையில் இந்த எழுத்தாணை மனு விசாரணை நடைபெறவிருக்கிறது.

இந்த எழுத்தாணை பற்றிய பூர்வாங்க விசாரணை கடந்த 25-11-76ல் நடைபெற்றபோது ஏழு தமிழ் இளைஞர்களின் சார்பிலும் திருவாளர்கள் எஸ். நடேசன் கியூ. சி, எம். சிவசிதம்பரம், கே. கந்தசாமி கனக—ஈஸ்வரன், டாக்டர் நீலன் திருச்செல்வம், எஸ். மகேந்திரன், எஸ். உருத்திரமூர்த்தி கனகமனோகரன் ஆகியோர் ஆஜராகினர்.

அமரர் திருச்செல்வம் அவர்கள், அமரராவதற்கு முன்னர் தம் கைப்படத் தயாரித்து வைத்திருந்த எழுத்தாணையின் அடிப்படையிலேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குறி[illegible]

## தேசிய பேரவையில் செந்தமிழ் இலக்கிய முழக்கம்;

# தமிழர் கண்ட அறவழி அரசியலை

## எடுத்துவிளக்கினார் செ. இராசதுரை பா. உ.

**வெறும் எண்ணிக்கைத் தொகையை வைத்துக்கொண்டு ஒரு நாட்டின் அரசியலைத் தீர்மானிப்பதென்பது—நாட்டை ஆளுவது என்பது முறையானதல்லவென்று பண்டைக்கால அரசியல் மேதைகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் என்பது வெறும் எண்ணிக்கைத்தொகையை வைத்துக் தீர்மானிப்பதல்ல. அரசியல் என்பது, மனச்சாட்சியை வைத்து—தருமத்தை வைத்து—நீதியை வைத்து—அறத்தை வைத்து தீர்மானிப்பதுதான் என்பது பண்டைக்கால அரசியல்வாதிகள் உலகிற்கு அறிவுறுத்திய உண்மை.**

உலக நாடுகளிலே காலத்திற்குக் காலம் பல அரசாங்கங்களை அக்காலத்திலே மன்னர்கள் அமைத்தார்கள். அப்படி அமைத்த மன்னர்களுடைய பெயர்கள் சில சரித்திர வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கின்றன. காரணம், மக்களுடைய மன நிலைகளை அறிந்து — மக்களுடைய தேவைகளை அறிந்து—மக்களைத் தருமத் வழியிலே — நீதியின் வழியிலே — அறத்தின் வழியிலே அவர்களை நடத்தியமையால் அம்மன்னர்கள் வரலாற்றிலே சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்தியாவிலே அசோகச் சக்கரவர்த்தி, இராஜராஜ சோழன் போன்ற மன்னர்களின் பெயர்கள் — இலங்கையிலே எல்லாளன், பராக்கிரமபாகு போன்ற மன்னர்களின் பெயர்கள் சரித்திர வரலாற்று ஆசிரியர்களினால் பாராட்டப்பட்டிருக்கின்றன. அறம் அரசியலிலே எப்பொழுது மறைக்கப்படுகிறதோ— அரசியல்வாதிகள் மன்னர்களாக இருந்தால், அறத்தை எப்பொழுது மறக்கிறார்களோ அந்த நாட்டிலே அரசியல் நிலைக்கமுடியாது. அரசியலிலே அவர்கள் நிலைத்திருக்கமுடியாது. இதைப் பல இலக்கியங்கள் எமக்கு எடுத்துக்காட்டியிருக்கின்றன.

சிறப்பாக அறத்தினுடைய வலிமையை உறுத்துகின்ற ஓர் இலக்கியத்தின் சில பகுதிகளை இங்கே நான் கூற விரும்புகிறேன். ஏனென்றால் இந்தத் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு செயலாற்றுவதன் மூலம், இந்நாட்டு மக்களை மேலும் துன்பத்துக்குள்ளாக்கி அவர்களின் உரிமையைச் சட்டத்தின்மூலம் பறித்து தருமத்துக்குப் புறம்பாக நடக்கின்றவர்களுக்கு அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாக நிற்கும் என்று சங்க இலக்கியங்கள் சொல்லுகின்ற சான்றுகளை எடுத்துக்கூற வேண்டியிருக்கிறது.

ஏனெனில் இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கையின் பிரதிபலிப்பு அரசியல் என்பதும் ஓர் இலக்கியமே தமிழ் நாட்டிலே சிலப்பதிகாரம் என்னும் ஒரு பெரும் இலக்கியப் படைப்பு இருக்கின்றது. அதிலே மன்னர்களைப் பற்றிச் சொல்லும் பகுதிகள் அரசாங்கத்துக்கு, மக்கள் ஆட்சியிலே இருக்கும் நமக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும். பாண்டிய மன்னனுடைய அரண்மனையிலே தனக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வந்த கண்ணகி; தன்னுடைய நாட்டைப்பற்றிக் எடுத்துச் செல்லும் பொழுது தன்னுடைய நாட்டு மன்னர்கள் தர்மத்தையும் அறத்தையும் பேணிக்காத்து வந்தார்கள் என்று மிக அழகாக எடுத்துச் சொல்கிறாள்,

ஒரு மன்னன் தன்னுடைய மகன் செலுத்திய தேர் ஒரு மாட்டுக் கன்றுக்குட்டியின் மேலே ஏறியதற்காகத் தன்னுடைய ஒரே மகனை, அரசின் வாரிசாக வரவேண்டிய ஒரே மகனைத் தேர்க்காலின் கீழ் இட்டுக் கொன்றான் என்று சொல்லும் வரலாற்றை அங்கே கண்ணகி எடுத்துச் சொல்கிறாள். எனவே, இன்று நமது நாட்டிலே இருக்கும் தமிழ்த் தேசிய இனத்தவராகிய— நாம் எந்த நிலையில் நம்முடைய எண்ணங்களை எடுத்துச் சொல்கிறோம் என்று நீங்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும். கண்ணகி சொல்கிறாள்:

''வாயிற் கடைமணி நடுநா
நடுங்க
ஆவின் கடைமணி உகநீர்
நெஞ்சு சுட
தான் தன் அரும்பெறல்
புதல்வனை
ஆழியில் மடித்தோன்
பெரும் பெயர் புகார்
என்பதியே''

என்னுடைய நாடு, ஒரு மாட்டுக் கன்றுக்குட்டியின் உயிரைப் பறித்த மன்னனுடைய மகனைத் தேர்க்காலின் கீழ் இட்டுக் கொன்ற, அறம் வழுவாத, தர்மம் வழுவாத அரசியல் நடைபெறும் நாடு. சத்தியம் நடைபெறும் நாடு. அந்த நாட்டிலே இருந்து வந்திருக்கிறேன் என்று சொல்கிறாள். இந்தச் சிறப்பைச் சேக்கிழார் பெரிய புராணத்திலே அழகாக எடுத்துச்சொல்கிறார்:

''ஒருமைந்தன் தன் குலத்துக்
குள்ளான் என்பதும்
உணரான்
தருமந்தன் வழிச் செல்கை
கடனென்று தன் மைந்தன்
மருமந்தன் தேராழி உற
ஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ
மற்றெளிதோ தான்''

"தன்னுடைய வம்சத்துக்கு ஒரு மகன்தான் இருக்கிறான் என்பதைக்கூட உணராமல் சத்தியத்தை நிலைநாட்டிய மன்னன்" என்று சொல்கிறார்.

''தருமந்தன் வழிச்செல்கை
கடனென்று தன் மைந்தன்
மருமந்தன் தேராழி உற
ஊர்ந்தான் மனுவேந்தன்''
தருமந்த அரசாட்சி அரிதோ
மற்றெளிதோ தான்''

என்று சேக்கிழார், பெரிய புராணத்திலே அந்த மன்னனை ஏற்றிப் பாடுகின்றார். காரணம், தர்மம் அரசியலில் இருந்தது, அறம் அரசியலிலே இருந்தது என்பதை நிலைநாட்டுவதற்காக. அது மட்டுமல்ல. ஒரு புறாவின் உயிருக்காகத் தன்னுடைய உடம்பை அரிந்து கொடுத்து தன்னுமொரு மன்னன் தர்மத்தை நிலைநாட்டினான் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

"குருநடை புறவின்
நெடுந்துயர் தீர
வெரிதர பருந்தின்—
இடும்பை நீங்க
அரிந்து உடம்பிட்டோல்
அறந்தரு கோலும்
திரிந்து வேறுகும் காலமும்
உண்டோ''

என்று அங்கே அந்த மன்னனுடைய தர்மத்தைப் பற்றி அவர் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அரசியல் என்பது வெறும் தலைகளை வைத்து, எண்ணிக்கையைக் கொண்டு செய்யும் முடிவு அல்ல, மனதில் நாம் எடுக்கும் முடிவுகளைக்கொண்டு நாம் ஆக்கும் சட்டங்களைக் கொண்டு நாட்டு மக்கள் திருப்தியடைந்திருக்கிறார்களா. நாட்டு மக்களை நாம் திருப்திப்படுத்தியிருக்கிறோமா, நாட்டு மக்கள் அவற்றை வரவேற்றிருக்கிறார்களா என்பதை அரசாங்கத்தில் இருப்பவர்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் நான் அதை எடுத்துச்சொன்னேன்.

அதுமட்டுமல்ல, நீதிகேட்டுச்சென்ற கண்ணகி தன் முன்னே நிற்பதைப்பார்த்த மன்னன், அவளுக்கு நேர்ந்த துன்பத்தைப் பார்த்து அவளைக் கண்டவுடனே தன்னுயிர் போன உடம்பாக மாறினான் என்று சிலப்பதிகாரம் சொல்கிறது. ஆனால், நாமோ அரசியலுக்கு அறம் அவசியமில்லை என்று நினைக்கிறோம். நம்மிடம் ஆட்பலம் இருக்கிறது. தேசிய அரசுப் பேரவையில் எண்ணிக்கைப்பலம் இருக்கிறது. எந்தவிதமான சட்டங்களையும் நாம் ஆக்கிக் கொள்ளலாம், அவற்றின் மூலம் எத்தனை இலட்சம் மக்களின் மனம் குமுறினாலும் பரவாயில்லை. எத்தனை இலட்சம் மக்கள் கண்ணீர் வடித்தாலும் பரவாயில்லை. ஆனால், அப்படிச் சட்டங்களை ஆக்கிய மன்னர்கள் வரலாற்றிலே கொடுங்கோலர்களாகக் கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியான சட்டங்களை மக்கள் சகாப்தத்திலே, ஜனநாயக சகாப்தத்திலே ஆக்கிய அரசியல்வாதிகள் இருந்த இடம்தெரியாமல் போயிருக்கிறார்கள் என்று வரலாறு நமக்குச் சிறந்த பாடங்களைச்சொல்லித் தருகின்றது,

"காவிசொரி நீரும் கையில்
தனிச் சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்
—பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த
கருங்குழலும் கண்டஞ்சி
கூடலான் கூடலாயினான்."

என அங்கே கண்ணகி போன தோற்றத்தைப் பார்த்த பாண்டியமன்னன் தன்னுடைய உயிர்போனாற் போலானான். ஏனென்றால் கண்ணகியுடைய கணவனுக்குத்தான் தீர்த்த தீர்ப்பு அநீதி என மன்னன் கண்டதால் அவனுடைய உள்ளம் குமுறியது. நெஞ்சம்சுட்டது என அங்கே பார்க்கிறோம். சில அரசியல்வாதிகளுக்கு அறம் அவசியம் என வலியுறுத்திச் சொல்வதற்காகத் தான் இதை இங்கே குறிப்பிட்டேன்.

(17-11-76ல் தேசிய அரசுப்பேரவையில் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி)

---

# சிறுபான்மை தமிழ் மக்களுக்கு உழைத்த உத்தமர்

உலக சட்ட அறிஞர்களில் ஒருவரும் இலங்கையின் தன்னிகரில்லா சட்ட நிபுணரும் தமிழ் இனத்தின் விடுதலை இயக்கத் தளபதிகளில் ஒருவரும், இலங்கை வாழ் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் தீவிர சமதர்மவாதியும், தமிழ் அரசுக் கட்சியின் துணிவுள்ள முற்போக்குவாதியும், முன்னாள் உள்ளூர் ஆட்சி அமைச்சருமான திரு. மு. திருச்செல்வம் அவர்கள் காலமான கசப்பான செய்திகேட்டு கவலை அடையாத தமிழன் எவனும் இருக்கமாட்டான் குறிப்பாக தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கு என்றுமே ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

பெரியார் அமரர் திருச்செல்வம் அவர்கள் உள்ளூர் ஆட்சி அமைச்சராக இருந்த காலத்தில் யாழ்பாணப் பகுதிகளில் உள்ள உள்ளூர் ஆட்சி மன்றங்களில் தாழ்த்தப்பட்ட மக்களும் அங்கம் வகிக்கவேண்டுமென்ற பெரு நோக்கத்துடன் பல உள்ளூர் ஆட்சி மன்றங்களின் வட்டார எல்லைகளை புனருத் தாரணம்செய்து தாழ்த்தப்பட்ட மக்களையும் உள்ளூர் ஆட்சி மன்றங்களில் அங்கம் வகிக்க வைத்த பெருமை அமரர் திருச்செல்வத்துக்கும் தமிழ் அரசுக் கட்சிக்குமே உரியது.

குறிப்பாக சுன்னாகம் பட்டின சபை தொகுதியில் கிராம சபை ஆகியவற்றில் வள்ளுவ குல மக்களும் அங்கம் வகிக்கக் கூடிய முறையில் வட்டாரங்களைபிரித்துத் தந்ததற்காக வள்ளுவகுல மக்கள் என்றுமே அமரர் திருச்செல்வத்தை நினைவுறுத்தி அன்னார் காட்டிய வழி தவறாது அரசியல் வழி நடப்பாாகள் என்று அவர் முன் கவலையுடன் தெரிவிக்கிறேன்.

அச்சுவேலியில் கோப்பாய் தொகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அடிமைத்தனத்தை ஒழித்து சுதந்திர மக்களாக வாழவேண்டும் என்று ஒரே நோக்கத்துடன் அன்றையதேசிய அரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களாக இருந்த டாக்டர் என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் ஆகியோர் வகுப்புவாத ரீதியில் குரல் எழுப்பி தமிழ் பிரதேசத்துக்கு வீடு அமைப்புத் திட்டத்துக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை எடுத்துச்சென்று அச்சுவேலியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்கிறார் என்று தேசிய பேரவையில் கண்டனம் தெரிவித்ததையும் பொருட்படுத்தாமல் நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளை கட்டிக்கொடுத்து அச்சுவேலி தாழ்த்தப்பட்ட மக்களின் அடிமைத்தளைகளை அறுத்தெறிந்த அமரர் திருச்செல்வம் அவர்களை என்றுமே சிரமேற்கொண்டிருப்பார்கள்.

—ஆசிர்வாதம் ஹென்றி(ச. நீ.)
பட்டின சபை உறுப்பினர்
சுன்னாகம்

---

# கறுப்பு 'ரை'யுடன் வேம்படி மாணவிகள்!

வேம்படி மகளிர் அமரர் திருச்செல்வத்தின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக கறுப்பு'ரை' அணிந்து வகுப்புக்களுக்குச் சென்றார்கள்.

வேம்படி மகளிர் கல்லூரி ரையில் புறப்பக்கம் மஞ்சல் கோடிடப்பட்டது வெறும் கறுப்பாக இருந்ததால் சிங்கத் தமிழன் சிவகுமாரனின் மரணத்தின்போது தமது கல்லூரி ரைகளையே புறப் பக்கமாக அணிந்து துக்கம் அனுட்டிக்க வேம்படி மகளிருக்கு வசதியாக அமைந்து விட்டது.

அதை அடுத்து பொலிசாரின் கெடுபிடியாலோ மேலிடத்து வற்புறுத்தலாலோ வேம்படி மகளிர் அதிபர் செல்வி ஆறுமுகம்

—3-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்றிட்ட வீரர் கோமான் திருச்செல்வம்

பேராசிரியர் கலாநிதி
## சு. வித்தியானந்தன்

**தமிழ் இனத்தின் முன்னேற்றத்திற்குப் பல துறையிற் செயற் திட்டங்கள் வகுத்துக் கொடுத்த வீரர் கோமான் திருச்செல்வம் அவர்களைத் தன்னோடு இறைவன் இணைத்துக்கொள்வதற்கு ஒரு சில மணித்தியாலத்திற்குமுன், அவர் தமிழ் இளைஞரைக் கொலைக் குற்றத்திலிருந்து பாதுகாக்கும் சிந்தனையிலீடுபட்டிருந்தார். கடந்த ஓராண்டாகத் தமிழரின் தனியரசுக்காக இரவு பகலாக அயராது உழைத்துத் தன் உயிரையும் இத்தொண்டிலே பலிகொடுத்த அப் பெருந்தகை, ட்ரயல்-அட்-பார் வழக்கில் ஈட்டிய வெற்றி வரலாற்றுப் புகழ் பெற்றுவிட்டது. தமிழர் இத்தீவிலே பரம்பரை பரம்பரையாகத் தனியாட்சி செய்து வந்தவர்கள் என்பதற்கு மறுக்க முடியாத ஆதாரங்களைக் காட்டி, அந்த இனம் இனியும் தனது ஆட்சியை இந்நாட்டிலே நிலைநாட்டத்தான் போகின்றது என்பதைத் துணிச்சலுடன் பகிரங்கமாக நீதித்தலத்திலே நிறுவிய பெருமை இவருக்குண்டு.**

தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஏறக்குறைய 20 ஆண்டுகளாக, அரசாங்கத்தில் உயர் பதவி வகித்துக்கொண்டிருந்த காலத்திலும்கூட, கட்சியின் சகல நடவடிக்கைகளுக்கும் பக்கத் துணையாக இருந்து, கட்சியின் முக்கிய அரசியல் முடிவுகளுக்குச் சூத்திரதாரியாக விளங்கியவர் அவர். அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும்போதே அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக மூன்றுமாத கட்டாய லீவில் அனுப்பப்பட்டு, அப்பதவியைத் துறந்தார்.

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், இரண்டினையும் தயாரித்து உதவியவர் இவரே. மாவட்ட சபைகள் மசோதா இவர் உருவாக்கியதே. தமிழாராய்ச்சி மகாநாட்டுப் படுகொலை பற்றி விசாரிக்கக் கிறெட்சர் விசாரணைக் குழுவினை நியமிக்கும் புதிய ஆலோசனையை வழங்கி, ஆணைக்குழுவைத் தெரிவு செய்ய உதவியவரும் இவரே.

தமிழருக்கும் சிங்களவருக்கும் ஒற்றுமை ஏற்படுத்தப் பல முறை முயற்சித்தார். இரு இனத்திற்குமிடையே ஒரு பாலமாகப் பல காலம் விளங்கினார். இதனாலே தமிழர் சிலர் அவரை ஒதுக்கவும் அவரைப் பற்றிப் பொய்ப்பிரசாரம் செய்யவும் முயன்றனர். காலத்துக்குக் காலம் அவர் தமிழ் இனத்தின் ஈடேற்றத்திற்காக எடுத்த முயற்சிகளைச் சிலர் விளங்கிக் கொள்ள இயலாமலிருந்தமையும், விளங்கிக்கொள்ளவோ ஏற்கவோ மறுத்தமையும் தமிழினத்தின் துர்ப்பாக்கியமே.

தமிழரும் சிங்களவரும் ஒற்றுமையாக வாழமுடியாதென்பதை உறுதியாக உணர்ந்தவுடன் தமிழ் ஈழம் அமைப்பதற்கேற்ற திட்டங்களைத் தீட்டியதுடன், நாம் இனித் தனியேதான் எமது பாதையை அமைக்கவேண்டுமென்பதை ஆணித்தரமாக வெளியிட்டார்.

நான் ஓர் அரசியல்வாதியுமல்லன், எந்த ஓர் அரசியற் கட்சியின் உறுப்பினனுமல்லன். ஆயினும் கடந்த முப்பதாண்டுகளாகத் தமிழ் இனத்தினதும் தமிழ் மொழியினதும் முன்னேற்றத்திற்காகச் செயலிலும் பேச்சிலும் உழைத்துவந்திருக்கின்றேன். அந்த வகையிலே திருச்செல்வம் அவர்களைப்பற்றி மேலே கூறியவற்றோடு இன்னும் சில குறிப்புக்களைத் தரலாமெனக் கருதுகின்றேன்.

வெளிநாடுகளிலே தமிழர் பிரச்சினைகளைப் பற்றிப் பிரபலப்படுத்தியதில் இவருக்கு முக்கிய இடமுண்டு. அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டினை யாழ்ப்பாணத்திலே நடத்தவேண்டுமென வற்புறுத்தி அதற்குரிய செயற்றிட்டம் வகுத்தவர்களுள் இவரும் ஒருவராவர். இன்று கீழ் மாகாணத்திலே தமிழ்த் தலைவர்களிலே தந்தை செல்வாவுக்கு அடுத்தாற்போல அப்பகுதித் தலைவர்களதும் பொதுமக்களதும் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்றவர் இவரேயாவர். இறுதிச் சடங்கின் ஆயிரக்கணக்கிலே கலந்துகொண்டு கண்ணீர் வடித்த கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் இக்கூற்றினை மெய்ப்படுத்துவர். அவர் உயிரோடிருந்திருந்தால் அடுத்த பொதுத் தேர்தலிலே பொத்துவில் தொகுதியில் மிகக் கூடுதலான வாக்குகளாற் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பார்.

அவர் அமைச்சராக இருந்தபோது, கிழக்கு மாகாணத்தின் பலதுறை அபிவிருத்தியைக் கிராமச் சபைகள் மூலம் செயற்படுத்தினார். துறை நீலாவணை, சேனைக்குடியிருப்பு முதலிய கிராமச்சபைகள் மூலம் தொடக்கிவைத்த நீர் அபிவிருத்தித் திட்டங்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும். அவர் பதவி வகித்த காலத்திலேயே மட்டக்களப்பு (கல்லடி கிராமச்சபையை உள்ளடக்கி) மாநகரசபை அந்தஸ்தைப் பெற்றது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காசிநாதன் அவர்கள் உள்ளூராட்சித் துணை ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டார்.

சமூகத்தொண்டனுகக் கணிக்கும்போது சாதி ஒழிப்பிற்கும் சீதனம் ஒழிப்பிற்கும் அவர் ஆற்றிய தொண்டினைப் பலர் அறியார். தாழ்ந்த சாதியினர் என ஒதுக்கப்பட்டோருக்கு உள்ளூர் ஆட்சித் திணைக்களங்களிலும் வேறு திணைக்களங்களிலும் உத்தியோகம் கொடுத்ததை யார் அறிவார்? சிறுபான்மையினருக்கு அச்சுவேலியில் அவர் அமைத்த வீடமைப்புத் திட்டம்பற்றி பேசுவோர் கிடையாது.

கல்வித்துறையிலே தமிழ்ப் பல்கலைக்கழகம் என்று நிறுவும் பணியில் முன்னணியில் நின்றார். தமிழாராய்ச்சி மகாநாடு சென்னையில் நடந்தபோது, ஈழத்துத் தமிழரின் பிரதிநிதியாக அரசினால் அனுப்பப்பட்டார். அப்போது அண்ணாத்துரை அவர்கள் "முன்பு சேரன் செங்குட்டுவன் காலத்திலே கடல் சூழ் இலங்கைக் கயவாகுமன்னர் இங்கு வந்து கண்ணகிக்குச் சிலையெடுத்துச்சென்றது போல, இன்று அங்கிருந்து திருச்செல்வம் அவர்கள் வந்து இங்குள்ள தமிழரின் அன்புக் களஞ்சியத்தை அங்குகொண்டுசெல்லப்போகின்றார்" எனக் குறிப்பிட்டார்.

தமிழ்பேசும் எழுதுவினைஞருக்கோ அவர் ஆற்றிய பணி மகத்தானது. பல பிரபல வழக்கறிஞர்கள் வழக்கில்லை என்று கையளித்தபோது, வழக்குண்டு, அதனைவெற்றிமாகச்செய்து முடிக்கலாமென்று செய்துகாட்டியவர் அவர். இதைக்தொடர்ந்தும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களுக்கும் கைகொடுத்து உதவியதை அவர்கள் இன்றும் நன்றியோடு நினைவு கூருகின்றனர்.

தமிழ்ப் பண்பாட்டில் சின்னமாகவும் திருச்செல்வம் விளங்கினார். மலேயாவில் ஆரம்பக் கல்வியும் பின்னர் கல்கிசை அர்ச் தோமஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றபோதும், அவர் வீட்டிலும் வெளியிலும் தமிழ்ப் பண்பாட்டின் சின்னமாக விளங்கினார். வீட்டிலே தூய வெள்ளை வேட்டியும், மேலங்கியும் அணியும் இவர், சிறந்த இந்து பக்தனுகவும் விளங்கினார். யாழ்ப்பாணத்திலுள்ள பல இந்துக் கோயில்களைப் புதுக்கலைமைத்தார். திருக்கோணேஸ்வரத்தைப் புனித தலமாக ஆக்க முயன்று தம் பதவியையும் துறந்தார். மன்னார் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் மரபுவழிவந்த புலவர்களையும் அண்ணாவிமாரையும் கௌரவிக்க உதவிவந்தார். உகந்தைக் கோயிலை மீட்கும் முயற்சியில் முன்னணியில் நின்று உழைத்தார். இவற்றை அறியாத சிலர் இவரைக் கறுவாக்காட்டுத் தமிழன் என ஒதுக்கியமை விந்தைக்குரியதே.

தந்தை செல்வா ஒருவரையே தமது தலைவராகக்கொண்டு, பிறருக்குத் தலைவணங்காத தன்மானத் தமிழன் இவர். பல்கலைக் கழகத்திற் படிக்கும் காலத்து மாணவர் மன்றத் தலைவனுகத் தெரிவு செய்யப்பட்டவர். அக்காலத்திலே மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரையை ஆதரித்துக் காந்தியடிகளுக்கும் தந்தி அடித்து அறிக்கையும் விட்டார். வெள்ளைக்கார அரசு கடும் தண்டனை விதிக்க முடியாது எச்சரிப்பதோடு, நின்றுவிட்டது.

சட்டத் திணைக்களத்திலே உயர் பதவி வகித்த காலத்திற் சுதந்திரக் கொடியை ஏற்க மறுத்து, சங்கிலி மன்னன் கொடியாகிய நந்திக் கொடியை மோட்டார் வண்டியிற் பறக்கவிட்டு எதிர்ப்பைத் தெரிவித்தார். மோட்டார் வண்டிகளின் இலக்கம் ஸ்ரீ இலக்கத்தோடு சேர்ந்து அமைந்ததனால், தனது பாவிப்புக்குப் புது மோட் வண்டி வாங்காது இறக்கும் வரை தனக்குச் சொந்தமாக ஈ. என். வண்டியினையே பாவித்து வந்தார். 1956ஆம் ஆண்டில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது, வெள்ளவத்தை விநாயகர் ஆலயத்தில் சத்தியாக்கிரகிகள் அடைக்கப்பட்டிருந்தனர். பயத்தினாலே அங்குதமிழர் ஒருவரும் செல்லவில்லை. இந்நிலையை அறிந்து அவர் அன்றிரவு அனைவருக்கும் தனது மோட்டார் வண்டியில் உணவு வாங்கிச் சென்று கொடுத்து ஆறுதல் கூறினார்.

அவர் உள்ளூர் ஆட்சி அமைச்சராக இருந்தபோது திருகோணமலையைப் புனித பூமியாக அமைக்கும் நோக்குடன் நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் ஓர் ஆணைக்குழுவினை நிறுவினார். இதனை அக்காலப் பிரதமர் செல்லுபடியாகாதெனக் கூறியதும் தமது மந்திரிப் பதவியைத் துறந்தார். சிங்களவரே இந்நாட்டினை ஆளுபவர், தமிழரும் முஸ்லிம்களும் ஆளப்படுவோர் என்று பகிரங்கமாகப் பேரவையிற் கூறப்பட்ட பின்னரும் அமைச்சர் பதவியையும் பாராளுமன்றப் பதவிகளையும் இறுகப் பிடித்துக்கொண்டிருக்கும் மேதைகளோடு ஒப்பிடும்போது திருச்செல்வத்தின் வீரத்திலும் தன்மானத்திலும் அவர்கள் எவ்வளவு கீழ்த்தரமாகக் காணப்படுகின்றனர்.

அவருடைய தொண்டுகளுக்கு ஒத்தாசையாக இருந்து, அவரைப் பலவகையில் ஊக்கிவந்த அவரது மனைவியார் திருமதி புனிதவதி அவர்களும் நாடறிந்த தொண்டர் திலகம். இணைபிரியாத தொண்டர்களாக விளங்கிய இவர்கள் இப்பொழுது, பிரிக்கப்பட்டு, புனிதவதி அவர்கள் தன்னந்தனியளுகத் தவிக்கின்றார். அவர்களுக்கு நாம் ஆறுதல் கூறமுடியாது. ஆயினும், அவர்களின் செயற்திட்டங்களுக்கு அன்னார் உயிர் கொடுத்து, அவை நிறைவேறக் கண்டு மனத்திருப்தி அடைய இறைவன் அருள் செய்யவேண்டும்.

---

## கிளிநொச்சியிலும் துக்கம் அனுஷ்டிப்பு

அமரர் திருச்செல்வத்தின் மறைவை முன்னிட்டு நடைபெற்ற துக்கத்தின் அனுஷ்டானத்தில் கிளிநொச்சித் தொகுதியும் பூரணமாகக் கலந்துகொண்டது. தமிழர் விடுதலைக்கூட்டணி தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்திய 24-11-76 புதன் கிழமை கிளிநொச்சி தொகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், தொழிலகங்கள் அனைத்தும் முழுநேர கடையடைப்பு செய்தன. எங்கும் கறுப்பு கொடிகள் பறந்தன.

---

## திருமலையில் துயரம்

த. வி. கூட்டணியின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான திருச்செல்வத்தின் மரணம் வானொலியில் செய்தியில் ஒலிபரப்பானவுடன் திருமலையில் மிகவும் பரபரப்பானதொரு சூழ்நிலை காணப்பட்டது. 'திரு'வின் மறைவு காட்டுத் தீ போல் பரவியதையடுத்து நகரெங்கும் கறுப்புக்கொடிகளைப் பெருமளவில் காணமுடிந்தது. கடைகள் மூடப்பட்டன. மக்கள் துயரத்தில் ஆழ்ந்தனர்.

---

## கறுப்பு'ரை'யுடன்

—2-ம் பக்கத் தொடர்

கல்லூரி ரைகளை புதிதாக மாற்றி அமைத்துக்கொண்டார். மாணவிகளிடம் புதிதாக வினியோகிக்கப்பட்ட ரைகளின் இரு பக்கமுமே கறுப்பு, மஞ்சல் கோடுகள் அச்சிடப்பட்டிருந்தது. ஆயின் முன்யோசனை மிக்க வேம்படி மகளிரோ எதிர்கால தேவைகளை எதிர் பார்த்து பழைய ரைகளைப் பாதுகாத்து வைத்திருந்தார்கள். அப்பழைய ரைகளையே புறவளமாக அணிந்து அமரர் 'திருவின்' மரணத்துக்கு துக்கம் அனுட்டித்ததுடன், வேம்படி அதிபர் முகத்திலும் கரியைப் பூசியுள்ளார்கள், வேம்படி மாணவிகள்.

---

## பழுகாமத்திலும் துயரவெள்ளம்

திரு. மு. திருச் செல்வம் கியூ,சி மறைந்த செய்தியறிந்து பழுகாமம் பொது மக்கள் துயர வெள்ளத்தில் ஆழ்ந்தனர். அமரருக்கு மரியாதை செய்யுமுகமாக பிரதான வீதிகளிலும் வீடுகளிலும் வெள்ளைக் கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

---

## பருத்தித்துறையிலும் துக்கம் அனுட்டிப்பு

த. வி. கூட்டணியின் விடுதலை வீரர்களில் ஒருவரும், சட்ட வல்லுனருமாகிய திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. அவர்களின் மறைவு [illegible]து 24-11-76 புதன் கிழமை பருத்தித்துறை சோகக் கடலில் மூழ்கியிருந்தது. அன்று வழமையாக மிகவும் சுறுசுறுப்புடன் காணப்படும் நகர் வெறிச்சோடிக்கிடந்தது. கடைகள் யாவும் பூட்டப்பட்டு, கறுத்தக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. மக்கள் சந்தையும், மீன் சந்தையும் வெறுமனே இருந்தன. மொத்தத்தில் நகரம் முழுதும் கறுப்புக்கொடிகளுடன் சோகமயத்தில் கிடந்தது.

அன்று காலை பருத்தித்துறை த. வி. கூட்டணித் தொண்டர்களும், தமிழ் இளைஞர் பேரவையினரும் தலைவர் திரு. மு. திருச்செல்வம் அவர்களின் உருவப் படத்தை பஸ்நிலையத்தில் வைத்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர். பின் [illegible] மாலை 6 மணியளவில் பருத்தித்துறை த. வி. கூட்டணித் தலைவர் திரு. ம. வேலும்மயிலும், பருத்தித்துறை த. இ. பேரவைத் தலைவர் திரு. ந. சிவசுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் நின்று அமரர் திருச்செல்வம் அவர்களின் உருவப்படத்திற்கு மலர்கள் தூவி, மெழுகுவர்த்தி [illegible] மௌன அஞ்சலி செலுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது ஆண்டுகால இயக்க வரலாற்றில்

# அமரர் 'திரு'வின் பணி மறக்கமுடியாதது!

## கொழும்பில் நடந்த கூட்டத்தில் நாவலர் உரை!

**"கடந்த 20 ஆண்டுகாலமாக தமிழினத்தின் உரிமைக்காக நடைபெற்ற இயக்கங்களில் அமரர் திருச்செல்வத்தின் பணி என்றுமே மறக்கமுடியாதது; அது ஒரு தனி அத்தியாயமாகும் அவரது முத்திரையின்றி எந்த ஒரு முக்கிய முடிவையும் நாம் எடுத்ததில்லை; அவரது இழப்பு ஈடுசெய்யமுடியாதது!"**

—இவ்வாறு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் 28-11-76 ஞாயிற்றுக்கிழமை மாலை தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளை நடத்திய அமரர் திரு இரங்கற் கூட்டத்தில் பேசிய நாவலர் அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாவலர் மேலும் கூறியதாவது:-

"1974ம் ஆண்டே தனி நாடு எனும் முடிவானகொள்கைக்கு திரு. திருச்செல்வம் வந்திருந்தார். மன்னார் இடைத்தேர்தலின் போது ஒரு நாள் இரவு முழுவதும், நாம் நமது நாட்டை அமைக்கவேண்டியதன் அவசியத்தையும் அதற்கு நமக்குள்ள சட்டரீதியான உரிமை பற்றியும், உத்தேச தமிழ் ஈழத்தின் எல்லைகள் குறித்தும் அவர் என்னுடன் விவாதித்தார். அன்றே அவர் மனதில் நிலைத்த அந்த எண்ணத்தைத்தான், ட்ரயல்-அற்-பார் நீதிமன்றத்தில் தெளிவாக எடுத்துரைத்தார். ட்ரயல்-அற்-பார் வழக்கில் அவர் நிகழ்த்திய உரை, தமிழ் ஈழப் போராட்டத்தின் அடிஅஸ்திவாரமாக விளங்குகிறது!" என்றார்.

திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-

"ட்ரயல்-அற்-பார் வழக்கில் நாம் வாதாடத் தொடங்கியது வழக்கில் வெற்றி காண வேண்டுமென்பதற்காகவோ, தண்டனையிலிருந்து தப்ப வேண்டுமென்பதற்காகவோ அல்ல, நமது இனத்தின் நிலையை உலகறியச் செய்யவே நாம் அங்கு வாதாடினோம். அந்தப் பணியை திருச்செல்வம் அவர்கள் செய்துமுடித்தார்.

"வழக்கில் வெற்றி காணுவதே ஒரே நோக்கமாக இருந்தால், மற்றவர்கள் போல நமது திருச்செல்வம் அவர்களும் வெற்றிதரக் கூடிய அம்சங்களை மட்டுமே பேசியிருக்க முடியும். ஆனால் வழக்கில் வெற்றிபெறுவதைவிட, நீதிமன்றத்தை ஒரு மேடையாகப் பயன்படுத்தி, தமிழ் ஈழத்தின் சுதந்திரக் கோரிக்கையை அகில உலகமும் அறியச் செய்யவேண்டும். என்பதிலே அவர் கண்ணும் கருத்துமாகஇருந்து அதைத் திறமையுடன் செய்து முடித்தார்.

திரு. திருச்செல்வம் அவர்கள் புதிய அரசியல் திட்டம் தமிழ் மக்கள் மீது பலவந்தமாக திணிக்கப்பட்டதை நீதிமன்றத்திலே அம்பலப் படுத்தியபோது — போரில் தமிழர்களை சிங்களவர்கள் வெற்றி கொண்டிருந்தால் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும் என்று கூறியநேரத்திலும் அதைக்கேட்டுக்கொண்டிருந்த தமிழ் நீதிபதி, "அப்படி ஒருபோதுமே அவர்கள் போரில் நம்மைவெற்றி கொண்டதில்லை என்று தம்மை மறந்து கூறுமளவுக்கு அனைவர் உள்ளத்தையும் தொடக்கூடிய முறையில் திருச்செல்வம் நிகழ்த்திய உரை நமது வருங்கால அரசியல் போராட்டத்துக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

"அதுமட்டுமன்றி— துரையப்பா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை கண்டு அவர் கண்ணீர் வடித்தார். அவர்களைக் காப்பாற்ற எப்பாடுபட்டும் முயலுவேன் என்று அவர் இரவுபகலாக சட்டப்புத்தகங்களை புரட்டினார் உணர்ச்சிமிக்க இந்த தமிழ் இளைஞர்களை நாம் இழக்கக்கூடாது என்று உள்ளம் குமுறினார். இந்தத் தமிழ் இளைஞர்களை காப்பாற்ற முயற்சிக்காதவன் எவனும் தமிழனேயல்ல வென்று அவர் எடுத்துக்கூறினார். அதற்காக எழுத்தாணையொன்றையும் தயார் செய்தார். அவர் தந்த மருந்துகளையே நாம் இப்போது கொடுத்துப் பார்க்கிறோம்!'

சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது.

அரசியல் சட்டத்தில் தமிழுக்கு சிங்களத்துடன் சம அந்தஸ்து கொடுத்துவிடுவதாலோ அல்லது மலைநாட்டுத் தமிழர் அனைவருக்கும் குடியுரிமை வழங்கி விடுவதாலோ, அல்லது அரசியல் சட்டத்தில் எல்லாமதங்களுக்கும் சம அந்தஸ்து வழங்கி விடுவதாலோ நமது பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை; இவைகளைச் செய்துவிட்டால், மீண்டும் ஒரு தமிழ் மாநாட்டுப் படுகொலையோ, செம்மணி படுகொலையோ, புத்தளம் துப்பாக்கிச் சூடோ யாழ்ப்பாணத்தில் தலைவர்கள் தாக்கப்பட்ட சம்பவமோ நடவாதென்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

"இங்குள்ள பிரச்சினை இரண்டு தேசிய இனங்கள்- இரண்டு நாடுகள்— சேர்ந்து வாழமுடியாததால் ஏற்பட்டுள்ள பிரச்சினை. சேர்ந்து வாழ முடியாதபோது பிரிந்து வாழ வேண்டியது தான். இதை உணர்ந்து தான் அமரர் திருச்செல்வம் அவர்கள் தமிழன் தன்னைத் தானே ஆள்வதற்கு இழந்த அரசுரிமையை மீட்கவேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். அவர் விட்டுச்சென்ற இலட்சிய வெற்றிக்கு உழைப்போமாக!

மூதறிஞர் தந்தை செல்வா பேசுகையில்—தமிழினத்துக்காக தனது திறமை முழுவதையும் அர்ப்பணித்துச் சேவை செய்தவர் திரு. திருச்செல்வம்- அவர் இவ்வளவு சீக்கிரத்தில் இறப்பாரென்று நான் எண்ணியிருக்கவில்லை என்று நாத்தழுதழுக்கக் கூறினார்.

கூட்டத்தில் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன், இ. தொ. கா. பிரமுகர் திரு. ஜேசுதாசன், தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் ஆ. ரகுபதி பாலசிறீதரன், இந்து இளைஞர் பேரவையைச் சேர்ந்த அ. சச்சிதானந்தம் தமிழ் மகளிர் பேரவை கொழும்புக் கிளைத்தலைவி செல்வி திலகவதி கணபதிப்பிள்ளை அ. எ. வி. சங்க செயலாளர், இ. பேரின்பநாயகம், தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி செயலாளர் நாயகம் ஐ. தி. சம்பந்தன், சட்டத்தரணி திருமதி சாந்தினிஞானகரன் ஆகியோரும் பேசினர். நாவண்ணன், இராஜமனோகரன், கனக மனோகரன் ஆகியோா கவிதாஞ்சலி செய்தனர்.

### நானே தமிழ் ஈழம் ...

—1ம் பக்கத் தொடர்

இ. பேரின்பநாயகமும் முமாக எடுத்துச் செல்வார்கள்.

கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் வைத்து அமரரின் அஸ்தியடங்கிய கலசத்தை கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்த சங்கரி மூதறிஞர் செல்வா; திருமதி செல்வநாயகம், நாவலர் அமிர்தலிங்கம் திருமதி அமிர்தலிங்கம் ஆகியோரும் ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் பொறுப்பேற்பார்கள். கிளிநொச்சியில், கிளிநொச்சித் தொகுதி மக்களின் அஞ்சலிக்கு அஸ்திவைக்கப்பட்ட பின்னர், அங்கிருந்து மோட்டார் ரதத்தில் ஊர்வலமாக யாழ் நகருக்கு அஸ்தி எடுத்துச் செல்லப்படும்.

யாழ் நகரில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தை அஸ்தி சென்றடைந்த பின்னர், மறுநாள் அது பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக பொது இடமொன்றில் வைக்கப்படும். பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்துவதற்காக திரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4-12-76 சனிக்கிழமை காலை யாழ்ப்பாணத்திலிருந்து மூதறிஞர் செல்வா தலைமையில் ஊர்வலமாக கீரிமலைக்கு அஸ்தி எடுத்துச் செல்லப்படும். அங்கு அமரர் இரங்கற் கூட்டம் நடைபெறும். அதையடுத்து அமரரின் புனித அஸ்தி புனித தீர்த்தத்தில் சங்கமமாக்கப்படும்.

### வடக்கு, கிழக்கு...

—1-ம் பக்கத் தொடர்

இயங்குவதில் தடை ஏதுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை!"

கூட்டத்தில் செயல் அதிபர்கள் நாவலர் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், உடுப்பிட்டி பா. உ. க. ஜெயக்கொடி, பண்டிதர் கா. பொ. இரத்தினம், மு. ஆலாலசுந்தரம், வி. யோகேஸ்வரன். திருமதி அமிர்தலிங்கம் உட்பட பலர் பேசினர்.

### அம்பிட்டியில் சுதந்திரன் ஆசிரியர் பேசுகிறார்

இலங்கை தேசிய மருத்துவக் கல்லூரி ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகத்தின் அம்பிட்டியிலுள்ள மேற்படி கல்லூரி மண்டபத்தில் டிசெம்பர் 4ம், 5ம் திகதிகளில் கலைவிழா ஒன்றை நடத்துகின்றனர். இக் கலைவிழாவின் ஓர் அம்சமாக 5-12-76 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்கள் "மொழியும் வாழ்வும்" என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றவிருக்கிறார்.

### கவிதை அரங்கும் சொற்பொழிவும்

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் 4-12-76 பிற்பகல் 4 மணிக்கு வெள்ளவத்தையிலுள்ள மேற்படி சங்கப்பணிமனையில் கவிதை அரங்கும், சொற்பொழிவு நிகழ்ச்சியும் இடம்பெறுகின்றன. சிறந்த கவிஞர்கள் மூவருக்குப் பரிசு அளிக்கப்படும். "சங்க இலக்கியம் காட்டும் தமிழர் வாழ்வு" எனும் பொருள்பற்றி சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகிறார்.

### இன்றைய கருத்தரங்கு

தமிழர் விடுதலைக் கூட்டணிகொழும்புக் கிளையின் சார்பில் இன்று (1-12-76) புதன்கிழமை மாலை 6 மணிக்கு திரு. ஈழவேந்தன் தலைமையில் பம்பலப்பிட்டி லோறீஸ் வீதி 51ம் இலக்க இல்லத்தில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கில் கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி, "எமக்கு வாழ்வுண்டா?" என்ற தலைப்பில் உரையாற்றுகிறார்.

### சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

ஈழப்பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தினால் 27-11-76 அன்று பரந்தனில் நடத்தப்படவிருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு திரு. மு. திருச்செல்வம் அவர்களின் மறைவு குறித்து பின் போடப்பட்டுள்ளது. எதிர்வரும் 4-12-76 சனிக்கிழமை சீட்டிழுப்பு நடைபெறும். 4ம் திகதி வரை சீட்டுக்கள் செல்லுபடியாகும் என்று சீட்டிழுப்பு பொறுப்பாளர்கள் அறிவிக்கின்றனர்.

### சண்முகானந்த கானசபா அனுதாபம்!

கொழும்பு பண்டார நாயகா மாவத்தையைச் சேர்ந்த சண்முகானந்தகான சபா அமரர் திருச்செல்வம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து கூட்டம் ஒன்றை சிவசுப்பிரமணிய சுவாமிகோவிலில் நடத்தியது. மேற்படிசபைத் தலைவர் திரு. த. துரைராஜா வ. நடராசா, கு. குருசுவாமி ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினர். இருநிமிட மௌன அஞ்சலியும்மோட்ச அர்ச்சனையும் இடம்பெற்றது.

சுதந்திரன்
SUTANTIRAN

### வாராந்த பிரார்த்தனை

சிறைவாழ் செந்தமிழ் இளைஞர்களுக்காக மகளிர் பேரவை கொழும்புக் கிளை நடாத்தும் வாராந்தப் பிரார்த்தனை இவ்வாரம் 3-12-76 வெள்ளிக்கிழமை பம்பலப்பிட்டி லோறிஸ் வீதியில் உள்ள புனித—மேரி ஆலயத்தில் இடம்பெறும்.

### கலை நிகழ்ச்சி இன்று நடைபெறும்

ஊரெழு பிள்ளையார் கோவில் நிதிக்காக வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் இன்று (1-12-76) மாலை 6 மணிக்கு கலை நிகழ்ச்சி நடைபெறும். இக் கலை விழாவில் வனஜா—கிரிஜா சகோதரிகளின் பரத நாட்டியமும். ராமதாஸ்—ராஜகோபால் ஆகியோரின் நகைச்சுவை நாடகமும் இடம்பெறுகின்றன.

கடந்த 24-11-76 புதன் கிழமை நடைபெறவிருந்த இக் கலைவிழா அமரர் திருச்செல்வம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

தூய்மையே தெய்வீகம்

ஆரோக்கிய வாழ்விற்கு மெடிக்கேட்டீற் சோப் பாவியுங்கள்.

ஒரு மில்க்வைற் உற்பத்தி

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் டிசம்பர் மாதம் 1-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org